வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் சரவண குமார்

தேதி 9.4.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 தொகுதிகளில், வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள 2-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 210 வேட்பாளர்கள், போட்டிக் களத்தில் உள்ளனர்.

தெலுங்கு புத்தாண்டு, மற்றும் தமிழ் புத்தாண்டை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், வரும் 15-ஆம் தேதி முதல், ஜுன் 14-ஆம் தேதி வரை, மீன்பிடி தடைக் காலம் அமலாக உள்ளது.

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், ஏப்ரல் 19ஆம் தேதி

நடைபெறவுள்ள முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் விறுவிறுப்பாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் பிலிபித் பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். எவ்வளவு கடினமான சாதனையும் இந்தியாவிற்கு அசாத்தியம் அல்ல என்றும் இந்தியா இதை பலமுறை உலகிற்கு நிரூபித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதே உணர்வில் தான், இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த தமது அரசு பாடுபட்டு வருவதாக அவர் கூறினார். முந்தைய காங்கிரஸ் அரசு உலக நாடுகளிடம் உதவி கேட்டு வந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் மாறி விட்டதாகவும், கொரோனா காலத்தில் தடுப்பு மருந்துகளை வழங்கியதன் மூலம், உலகிற்கே இந்தியா உதவியதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார். நாடு வலுவாக இருந்தால் தான் உலகம் நம்மை செவிமடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் உற்பத்தியில் பிலிபித் பகுதியின் முக்கியத் துவத்தையும், விவசாயிகளுக்கான அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் திரு நரேந்திர மோடி தமது உரையில் கோடிட்டுக் காட்டினார். கரும்பு விவசாயிகளுக்கு உதவும் வகையில் அரசு பல சர்க்கரை ஆலைகளை தொடக்கி

இருப்பதாகவும், ஏற்கனவே உள்ள பல ஆலைகள், விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மத்திய பிரதேஷ் மாநிலம் பாலாகாட் பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் திரு நரேந்திர மோடி பேசுகையில், இது வெறும் தேர்தல் மட்டுமல்ல என்றும், புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான இயக்கம் என்றும் கூறினார். நாட்டின் ஒவ்வொரு நகரம் மற்றும் கிராமத்திற்கும் தமது அரசு முன்னுரிமை அளிப்பதாகவும், அனைவருக்கும் வளர்ச்சி, அனைவருக்கும் ஆதரவு என்பதே, அரசின் தாரக மந்திரம் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அதேவேளை, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, மற்றும், பழங்குடி மக்களுக்கும், மரியாதை அளிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று மாலை சென்னையிலும், பாரதிய ஜனதாவிற்கு ஆதரவு திரட்டும் வகையில், சாலை பவனி நடத்துகிறார். மத்திய பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, பூர்வ குடிமக்களான பழங்குடியினரின் நலன்களை காங்கிரஸ் பாதுகாக்கும் என்று கூறினார்.

*இரண்டாம் கட்டம்*

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 தொகுதிகளில், வரும் 26-ஆம் தேதி நடைபெற

உள்ள 2-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 210 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் உள்ளனர். இத்தொகுதிகளில், வேட்பு மனுப் பரிசீலனையின் போது, ஆயிரத்து 428 மனுக்கள் ஏற்கப்பட்ட நிலையில், ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான அவகாசம் நேற்றுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இறுதி வேட்பாளர் நிலவரம் குறித்து, தேர்தல் ஆணையம் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம்

தொழில் நுட்பங்கள், மக்கள் வாழ்க்கையின் முக்கிய அங்கமாக மாறி உள்ள நிலையில் வாக்காளர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை எளிதாக பெறுவதை உறுதிப்படுத்தவும் தேர்தல் ஆணையம் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வருகிறது. பயணத்திற்கு வரைபடம் எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு, தேர்தலில் வாக்களிக்க, வேட்பாளர்கள் பற்றிய விவரங்களும் முக்கியம் என்பதால், **உங்கள் வேட்பாளரை அறிந்து கொள்ளுங்கள்** என்னும் செயலி மூலம் வேட்பாளர்கள் பற்றிய எல்லாத் தகவல்களையும் ஆணையம் வாக்காளர்களுக்கு வழங்கி வருகிறது. வேட்பாளர்களின் குற்றப் பின்னணி உட்பட எல்லாத் தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளதால் வாக்காளர்கள் சரியான வேட்பாளரை தேர்ந்தெடுத்து வாக்களிப்பதில் தவறுகளை தவிர்க்க இயலும். தேர்தல் ஆணையத்தின் இந்த KYC மொபைல் செயலியை, தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் இருந்தும், **கூகுள் பிளே ஸ்டோர்** மற்றும் **ஆப்பிள் ஆப் ஸ்டோரில்** இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

*பாதுகாப்பு படை*

மேற்கு வங்கத்தில் மக்களவைத் தேர்தலை அமைதியான முறையில் நடத்த ஏதுவாக, வரும் 15-ஆம் தேதிக்குள் மேலும் 100 கம்பெனி மத்திய துணை ராணுவப் படைகளை பணியில் ஈடுபடுத்துமாறு, தேர்தல் ஆணையம், மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அறிவுறுத்தி உள்ளது.

*திரிணமுல் காங்கிரஸ்*

மத்திய அரசு விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்துவதாக குற்றம் சாட்டி, மூத்த திரிணமுல் காங்கிரஸ் தலைவர்கள் புதுடெல்லியில் இன்றும் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திரு டெரக் ஓ-பிரியன், திரு சாகேத் கோகலே, திருமதி சகாரிகா கோஷ் உள்ளிட்ட எம்பிக்கள் அடங்கிய திரிணமுல் காங்கிரஸ் குழு ஒன்று, நேற்று தேர்தல் ஆணையத்தை சந்தித்து பிரச்சனையில் தலையிடக் கோரியது. தொடர்ந்து இவர்கள் தேர்தல் ஆணைய அலுவகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் போலீசார் இவர்களை கைது செய்து, மந்திர் மார்க் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். பின்னர் போலிசார் இவர்களை விடுவித்த போதிலும் இவர்கள் காவல் நிலையத்திலேயே தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் ஆம்-ஆத்மி கட்சியும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டது.

இதற்கிடையே மேற்கு வங்கத்தில் வன்முறையில் ஈடுபடுவோருக்கு திரிணமுல் காங்கிரஸ் துணை நிற்பதாக பிஜேபி குற்றம் சாட்டி உள்ளது. மேற்கு வங்கத்தில், தேசிய புலனாய்வு ஏஜன்சி மற்றும் அமலாக்கத் துறை

அதிகாரிகள் தாக்கப்படுவதாக பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு ஷெஜாத் பூனாவாலா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

*வாழ்த்து*

இன்று தெலுங்கு புத்தாண்டும், வரும் 14-ஆம் தேதி தமிழ் புத்தாண்டும் கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களும், தெலுங்கு மக்களும் வாழ்வில் எல்லா வளம் மற்றும் மகிழ்ச்சியும் பெற்றுத் திகழ வேண்டும் என்றும், சமூகத்திற்கு உழைக்கின்ற மக்களாக மாறும் வாய்ப்பை நமக்கு வழங்குவதாக இத்திருநாட்கள் அமையட்டும் என்றும் அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

*இயந்திரம்*

புதுச்சேரி மாவட்டத்தின் ஏனாம்-மாகே பகுதிகளுக்கான, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், மற்றும், விவி-பேட் காகித தணிக்கை இயந்திரங்கள், ரெட்டியார் பாளையத்தில் உள்ள தேர்தல் துறையின் பாதுகாப்பு கிடங்கில் இருந்து, தேர்தல் ஆணையத்தின் வழிமுறைகளுக்கு இணங்க போலீஸ் பாதுகாப்புடன் இன்று காலை அனுப்பி வைக்கப்பட்டன. தேர்தல் நடத்தும் அதிகாரி திரு குலோத்துங்கன் தலைமையில், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்

பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள்- முகவர்கள் முன்னிலையில், இந்நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

*மீன்பிடி தடை*

புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் கடல் பகுதிகளில், வரும் 15-ஆம் தேதி முதல், ஜுன் 14-ஆம் தேதி வரையிலும் மாகே கடல் பகுதியில் ஜுன் 1 முதல், ஜுலை 31-ஆம் தேதி வரையிலும், மீன்பிடி தடைக்காலம் அமலாக உள்ளது. தடைக் காலத்தில் கட்டுமரம் மற்றும் நாட்டு படகுகள் தவிர இதர எல்லா வகையான படகுகள், குறிப்பாக, இழுவலை கொண்ட விசைப் படகில் மீன்பிடிப்பது தடை செய்யப் படுவதாக, புதுச்சேரி அரசின் மீன்வளத் துறை அறிவித்துள்ளது. இயந்திரம் பொருந்திய பைபர் படகில் மீன் பிடிப்பதும் தடை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுருக்குவலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் படகுகளுக்கும், உச்சநீதிமன்ற உத்தரவின் படி இந்த தடை பொருந்தும் என மீன்வளத் துறை தெரிவித்துள்ளது.

*வீரப்பன்*

தமிழக முன்னாள் அமைச்சரும், மூத்த திராவிட இயக்கத் தலைவருமான ஆர் எம் வீரப்பன் சென்னையில் இன்று காலமானார். உடல்நலக் குறைவினால் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு வயது 97, எம்ஜிஆர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் ஜானகி ராமசந்திரன் மற்றும் ஜெயலலிதா அமைச்சரவைகளிலும் அமைச்சராக பதவி வகித்த ஆர் எம் வீரப்பன்

பின்னர் எம்ஜிஆர் கழகம் என்ற பெயரில் தனிக் கட்சி தொடக்கினார். திராவிட இயக்கம் உள்ள வரை ஆர்எம் வீரப்பன் புகழ் நிலைத்திருக்கும் என்று தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான திரு மு க ஸ்டாலின் தமது இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். ஆர்எம் வீரப்பன் மறைவு அரசியல் உலகிற்கு மட்டுமின்றி, திரை உலகம். இலக்கியம், ஆன்மிகம் உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் பேரிழப்பாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கவிதா

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பான பணச் சலவை வழக்கில் மூத்த BRS தலைவர் திருமதி கவிதாவின் நீதிமன்றக் காவலை வரும் 23-ஆம் தேதி வரை நீட்டித்து, டெல்லி ரோஸ் அவின்யு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் கடந்த மாதம் 15-ஆம் தேதி அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட திருமதி கவிதாவின் இடைக்கால ஜாமின் மனு, நேற்று டெல்லி நீதிமன்றம் ஒன்றினால் நிராகரிக்கப் பட்டதும் குறிப்பிடத் தக்கது.

அரியானா

அரியானாவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சரும், முன்னாள் பிஜேபி பிரமுகருமான சவுத்ரி. பீரேந்திர சிங் இன்று புதுடெல்லியில், திரு முகுல் வாஸ்னிக் உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள் முன்னிலையில் இன்று காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். திரு சிங்கின்

மனைவியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திருமதி பிரேம்லதா-வும் காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர்.

ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் போட்டியில், பஞ்சாப்-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சென்னையில் நடைபெற்ற போட்டியில், கொல்கத்தா அணியால் நிர்ணயிக்கப்பட்ட 137 ரன் என்னும் இலக்கை நோக்கி இரண்டாவதாக ஆடிய சென்னை அணி, 18-ஆவது ஓவரிலேயே, 3 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வானிலை

தமிழகம்,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிக பட்ச வெப்பநிலை அடுத்த 5 நாட்களில், வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் போது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வெயிலின் தாக்கம் அதிகம் இருப்பதால் பொது மக்கள் தேவையின்றி வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும், போதிய நீர் அல்லது ஓஆர்எஸ் பருக வேண்டும் என்றும் தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

குறிப்பாக திறந்த வெளியில் வேலை செய்பவர்களும், குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள், வெப்ப அலையின் தாக்கம் குறித்து கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நீட் தேர்வு

இளங்கலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்க இன்றும் நாளையும் 2 நாள் சிறப்பு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர், neet.nta.nic.in என்ற இணைய தளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்க கடந்த மாதம் 16-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில், மறு வாய்ப்பு கேட்டு பல கோரிக்கைகள் பெறப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய தேர்வு முகமை, 2 நாள் சிறப்பு அவகாசம் வழங்கி உள்ளது. நீட் தேர்வு அடுத்த மாதம் 5-ஆம் தேதி நடைபெறும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், வரும் 19-ஆம் தேதி நடைபெறவுள்ள முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 தொகுதிகளில், வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள 2-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 210 வேட்பாளர்கள், போட்டிக் களத்தில் உள்ளனர்.

தெலுங்கு புத்தாண்டு, மற்றும் தமிழ் புத்தாண்டை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், வரும் 15-ஆம் தேதி முதல், ஜூன் 14-ஆம் தேதி வரை, மீன்பிடி தடைக் காலம் அமலாக உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------